கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஜனவரி மாதம் 07ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.2/2024
இன்
இடைநிலை மனு எண்.3/2024
இன்
அசல் வழக்கு எண்.291/2018

திருப்பரங்குன்றம் ஜன்னத்துல்
பிர்தௌஸ் முஸ்லீம் ஜமாத் மற்றும்
அறக்கட்டளை (அதன் செயலாளர் &
மேனேஜிங் டிரஸ்டி S.கமர்தீன்
அவர்கள் மூலம்

... மனுதாரர்/மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சையத் சுல்தான் பாட்ஷா
2. நாகூர் கனி
3. இப்ராகிம்ஷா
4. முத்துமுஹம்மது
5. நாகூர் மீரான் ... எதிர்மனுதாரர்கள்/
எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனுவானது இன்று 19.12.2024ல் இந்நீதிமன்றத்தில் இறுதி

விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் திரு.R.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 3 வரையிலான ஆவணங்களை வழக்கு கோப்பில் சேர்க்க அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

1.1) மனுதாரர் தரப்பு மனுவில் மனுதாரர்/வாதி தரப்பால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1 முதல் 3 வரையிலான ஆவணங்களை வழக்கு கோப்பில் சேர்க்க அனுமதிக்க வேண்டி

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் மனுதாரர்/வாதி தூய்மையான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்திலேயே இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மனுவின் மனுதாரர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காத நிலையிலும், நடவடிக்கை எந்த காரணமும் இல்லாத நிலையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் அது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தும் என்றும், எனவே மனுதாரர்/வாதியின் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

1.3) இருதரப்பின் மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

1.4) அதன்படி, மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாது தற்போது தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்கவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு தேவையான மற்றும் சட்டப்படியான ஆவணங்களாக இருப்பின் அவற்றை வழக்கு கோப்பில் சேர்ப்பது சட்டப்படியானதாகும்.

1.5) மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 3 ஆவணங்களில், மனுதாரர்/வாதி அசல் வாதியானவர் இறந்துவிட்ட சூழ்நிலையில், மனுதாரரை அறக்கட்டளையின் பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து புதிய மேனேஜிங் டிரஸ்டி மற்றும் செயலாளராக 03.03.2024ம் தேர்ந்தெடுத்ததாக கூறப்படும் தீர்மானத்தின் அசல் தாக்கல் செய்யப்படாமல் நகலாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி ஆவணம் பொறுத்து சான்றிட்ட நகலும் தாக்கல் செய்யப்படாத காரணத்தாலும் மேற்படி 1ம் ஆவணமானது சட்டப்படி ஏற்கத்தக்க ஆவணமாக இல்லாத நிலையிலும், 2, 3 ஆவணங்கள் நல்லடக்க பதிவு குறிப்பு மற்றும் மின் கட்டண இரசீதுகள் ஆகியவற்றின் அசலாக இருக்கும் காரணத்தால் மேற்படி ஆவணங்கள் மட்டுமே கோப்பிற்கு எடுக்க தகுந்த ஆவணங்களாக உள்ளது. எனவே, 1வது ஆவணமானது சட்டப்படியாக ஏற்கத்தக்க ஆவணமாக இல்லாமல் இருப்பதால் அதனை தவிர்த்து ஏனைய ஆவணங்களை கோப்பிற்கு எடுக்க அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** 1வது ஆவணத்தை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டும், 2, 3 ஆவணங்கள் மட்டுமே கோப்பிற்கு எடுக்க அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 07ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.01.08 14:42:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு:-</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.01.08 14:42:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.03/2024
இன்
இடைநிலை மனு எண்.02/2024
அசல் வழக்கு எண்.291/2018
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 07.01.2025